செ.வெ.எண். 175 நாள்:15.03.2013

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் முகாம் மீது தற்கொலை படை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் வீரமரணமடைந்த மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம் தும்மநாயக்கன்பட்டியைச் சேர்ந்த மத்திய ரிசர்வ் படைவீரர் பெருமாள் அவர்களின் பூதஉடலுக்கு தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர்.கே.ராஜீ, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அன்சுல்மிஸ்ரா,இ.ஆ.ப., மாவட்ட காவல்கண்காணிப்பாளர் திரு.பாலகிருஷ்ணன்,இ.கா.ப.,ஆகியோர் அஞ்சலி செலுத்தி ரூ.5,00,000- கான காசோலையினை அவரது குடும்பத்தினரிடம் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி காஷ்மீரில் பாதுகாப்பு படையினர் முகாம் மீது தற்கொலை படை தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் வீரமரணமடைந்த மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம் தும்மநாயக்கன்பட்டியைச் சேர்ந்த மத்திய ரிசர்வ் படைவீரர் பெருமாள் அவர்களின் பூதஉடலுக்கு மலர்வளையம் வைத்து மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர்.கே.ராஜீ, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அன்சுல்மிஸ்ரா,இ.ஆ.ப., மாவட்ட காவல்கண்காணிப்பாளர் திரு.பாலகிருஷ்ணன்,இ.கா.ப., ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி வீரமரணமடைந்த பெருமாள் அவர்களின் குடும்பத்தினருக்கு தமிழக அரசு சார்பில் ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.செல்லூர்.கே.ராஜீ அவர்கள் வழங்கி பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும் ஆறுதல் கூறினார். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் குடும்பத்திற்கு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் தெரித்துள்ளதாக மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் பெற்றோர்களிடம் கூறினார்.

பின்னர் வீரமரணமடைந்த பெருமாள் அவர்களின் பூத உடல் முழு அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது.

இந்நிகழ்வின் போது திருமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.எம்.முத்துராமலிங்கம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.சி.துரைராஜ், திரு.ஐ.மகேந்திரன், ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்கள் திரு.பால்பாண்டி(உசிலம்பட்டி), திரு.ஐ.தமிழழகன்(திருமங்கலம்), உசிலம்பட்டி நகர்மன்றத் தலைவர் திருமதி.யு.பி.ஆர்.பஞ்சம்மாள், உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) திரு.ராஜேந்திரன், மாவட்ட கவுன்சிலர்கள் திரு.ஐயப்பன், திரு.நீதிபதி பேரையூர் வட்டாட்சியர் திரு.த.சௌந்தரராஜ், துணை வட்டாட்சியர் திரு.செல்வராஜ் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் பொது மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**. வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**